சார்பு நீதிமன்றம், ஓமலூர்
SC.No.374/2023

நாள்.12.08.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 12.08.2025 ம் நாளாகிய இன்று திரு.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | அஜீத்குமார் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது நாரணம்பாளையத்தில் குடியிருந்து பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். எனது தோட்டத்தில் சோளம் விதைத்திருந்தேன். நான் விதைத்திருந்த சோளத்தை எனது சித்தப்பா அறுத்துக்கொண்டு போய்விட்டார். 16.08.2021 ம் தேதி நான் மதியம் 2 மணி சுமாருக்கு எனது சித்தப்பாவான ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று இனிமேல் சோளத்தட்டை அறுக்ககூடாது என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் ஆஜர் எதிரியான எனது சித்தப்பா அன்றைய மதியம் 3.30 மணிக்கு அரிவாள்மனையை எடுத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்து என் அம்மாவை வெட்ட வந்தார், நான் என் அம்மாவை வெட்டுவதை தடுத்து என் அம்மாவை வீட்டிற்குள் தள்ளி கதவை சாத்திவிட்டேன். அப்போது ஆஜர் எதிரி அந்த அரிவாள்மனையால் இதுவோடு செத்துபோடா என்று சொல்லி எனது இடது பக்க கழுத்திலும், தலையிலும் வெட்டினார். எனது இடது பக்க தோள்பட்டையிலும் வெட்டினார். அப்போது நான் தடுத்ததால் எனது வலது கையில் நடுவிரலுக்கு கீழே வெட்டிவிட்டார்.

2. அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்டதால் ஆஜர் எதிரி வெட்டிவிட்டு அரிவாள்மனையை கீழே போட்டுவிட்டு போய்விட்டார். நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். என் அம்மாவும், குழந்தைசாமியும் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது ஓமலூர் போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். எனது வாக்குமூலத்தில் என்னால் கையொப்பம் செய்யாமல் போனதால் கைரேகைதான் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் மனையால் தான் என் சித்தப்பா என்னை வெட்டினார் அந்த அரிவாள்மனை **ச.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. காயம்பட்டு எவ்வளவு நேரத்திற்கு பிறகு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 1.30 மணி நேரம் இருக்கும், என்னை பைக்கில் தான் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் ஆமாம். மயக்கம் எப்போது தெளிந்தது என்றால் 2 மணி நேரத்தில் தெளிந்திருக்கும். என்னை குழந்தைசாமிதான் பைக்கில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என்னை போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை சுமார் 6.30 மணி இருக்கும்.

5. நான் எத்தனை ரேகை வைத்தேன் என்றால் ஒரு ரேகை தான் வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தபோது எத்தனை இடத்தில் வெட்டுப்பட்டதாக சொன்னேன் என்றால் 6 இடத்தில் வெட்டுப்பட்டதாக சொன்னேன். என்னை போலீசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை தான் விசாரித்தார்கள். பிறகு எப்போதும் விசாரிக்கவில்லை. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் தகவல் அறிக்கை மட்டும் படித்தேன். வேறு எதையும் படிக்கவில்லை என்றால் ஆமாம்.

போலீசார் கொடுத்த முதல் தகவல் அறிக்கை மட்டும் படித்தேன் என்றால் ஆமாம்.

6. மருத்துவமனைக்கு சென்றபோது நான் சுயநினைவோடு இருந்தேனா என்றால் ஓரளவிற்கு சுயநினைவோடு இருந்தேன். கேட்டால் பேசும் அளவிற்கு இருந்தேன். என் அம்மாவை நான் வீட்டிற்குள் விட்டு கதவை சாத்தியதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அப்போது எதிரி என்ன செய்தார் என்றால் என்னை மாறிமாறி வெட்டினார். அம்மாவை வீட்டிற்குள் தள்ளி கதவை சாத்திய போதுதான் எதிரி என்னை வெட்டியதாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் ஆமாம். நான் கொடுத்த புகாரில் என் அம்மாவை வீட்டிற்குள் தள்ளியபோது எதிரி வெட்டியதாக இல்லை என்றால் சரியல்ல.

7. நான் மயக்க நிலையில் இருந்ததால் போலீசாரோ புகாரை எழுதி கொண்டார்கள் என்றாலும் அதில் இருக்கும் எந்த விவரமும் நான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்ல சொல்ல தான் எழுதினார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்ட பிறகு எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால் சுமார் 2 மணி நேரம் கழித்து வந்தார்கள். சம்பவத்தின்போது வேறு யார் இருந்தார்கள் என்றால் என் அம்மாவும், கலாவும் இருந்தார்கள். அவர்கள் சண்டையை விலக்கவில்லையா என்றால் அவர்கள் சத்தம்போட்டதால் தான் எதிரி அரிவாள்மனையை கீழே போட்டுவிட்டு சென்றார்.

8. எனக்கும், எதிரிக்கும் சொத்து தகராறு இருக்கிறது என்றால் ஆமாம். ஏற்கனவே 6 செண்ட் புறம்போக்கு நிலம் சம்மந்தமாக எதிரி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து எழுதி வாங்கினார்கள் என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பு 4 ஆண்டுகளாக எதிரி 6 செண்ட் புறம்போக்கு நிலத்தை கேட்டுக்கொண்டிருந்தார் என்றால் ஆமாம், நான் அதை எனது தாத்தாவிடம் வாங்கியதால் அதை கொடுக்க மறுத்துவிட்டேன். நான் எதிரியின் வீட்டிற்கு 2 மணிக்கு சென்றதாக தற்போது சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த விபரம் குறித்து எனது புகாரிலும், போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன்.

9. நான்தான் 4, 5 அடி ஆட்களை அழைத்துக் கொண்டு எதிரியை அடிக்கப்போனேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து 6 செண்ட் நிலத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக நானோ குடிபோதையில் கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திகொண்டு எதிரியை சிக்கவைப்பதற்காக இவ்வாறு பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இது பொய் வழக்கு என்றாலும், இந்த குற்றச்சாட்டிற்கும், எதிரிக்கும் எந்தசம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் சொத்து தகராறு என்றாலும், சொத்தை அபகரிப்பதற்காக எதிரி மீது கிரிமினல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

10. எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் அரிவாள்மனையில் நீளம், அகலம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் இந்த துருபிடித்த அரிவாள்மனையால் தான் எதிரி என்னை வெட்டினார். அந்த அரிவாள் மனை எங்களுக்கு பாத்தியப்பட்ட அரிவாள்மனை என்றால் சரியல்ல. அந்த அரிவாள்மனை எங்கள் வீட்டில் இருந்த அரிவாள்மனை என்றால் சரியல்ல. எதிரி அவர் வீட்டில் இருந்து தான் எடுத்துவந்தார். நான் காயம்பட்டு மயக்கநிலையில் இருந்ததால் அந்த அரிவாள்மனை எங்கிருந்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். குழந்தைசாமிதான் சொன்னார். எதிரிக்கும், இந்த குற்றச்சாட்டிற்கும் சம்மந்தமில்லை என்பதால் எதிரி இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யதக்கவர் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/-T.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.